Registered as News Paper பக்கங்கள் 04 விலை ரூபா: 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் நிசைரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஐப்பசி 20 (06 - 11 - 1991) புதன்கிழமை ஓசை: 261

## தேசியக்கொடியைவணங்குவது நாட்டை வணங்குவதாகும்

"ஒரு நாட்டின் தேசியக் கொடியை வணங்குவது அந்த நாட்டை வணங்குவது போன்றது. நாட்டின் தலைவர், படை, ஆட்சி என்பவற்றை விடவும் தேசியக் கொடி மதிக்கப்படுகின்றது." இவ்வாறு இவ்வாண்டு தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு தமிழீழ மாவீரர்நாள் குழு நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது. இச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: 1977 ஆம் ஆண்டு முதல் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கொடியாக இருந்து வரும் புலிக்கொடியி உள்ள எழுத்துக்கள் நீக்கப்பட்டு தமிழீழத்தின் தேசியக்கொடியாக1990ஆம் ஆண்டுமுதல் இருந்து வருகின்றது. (4ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர் தேசியத்திற்கு அங்கீகாரம்!

# பேச்சுவார்த்தைக்கு முன் சகஜ நிலை

### இலவச இணைப்பு

1982 தொடக்கம் மண்மீட்புக்காய் உயிர் நீத்த மாவீரர்களின் குறிப்பேடு இணைக்கப்பட்டுள்ளது.

### சிறு திருத்தம்

1982 ஆம் ஆண்டு தொடக்கம் மண்மீட்புக்காய் உயிர் நீத்த மாவீரர் குறிப்பேடு இணைக்கப்பட்டுள்ளது

11-3-86 இல் வீரச்சாவு எய்திய 2ஆம் லெப் பெரிய தம்பியின் பெயர் மதியழகன்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் நிலைப்பாட்டை விளக்கி தொண்டாவுக்கு மகேந்திரராசா கடிதம்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. மகேந்திரராசா நேற்று அமைச்சர் தொண்டமானுக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் சமாதானப் பேச்சுகளுக்கு முன்னோடியாக ஒரு அமைதியான, நல்லெண்ண சூழ்நிலை உருவாக்கப்படுவதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

இராணுவ ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் இருமுனைகளில் சிறிலங்கா அரசு தமிழ் மக்கள்மீது பாரிய அழுத்தங்களை பிரயோகித்து வருவதாக குற்றம் சாட்டியுள்ள திரு. மகேந்திரராசா, "தமிழர் பிரச்சினைக்கு உருப்படியான, நிரந்தரமான தீர்வைக்காண அரசு தரப்பில் உண்மையான நேர்மையான அக்கறை இருக்குமாயின் இந்த இராணுவ - பொருளாதார அழுத்த அணுகுமுறை கைவிடப்பட வேண்டும்" எனச்சுட்டிக் காட்டியுள்ளார்.

"தமிழீழ மக்களின் தேசிய அந்தஸ்து அங்கீகரிக்கப்பட்டு, அவர்களது தேசிய அபிலாசைகள் பூர்த்தியாகும் வகையில் ஒரு தீர்வுத் திட்டம் முன்வைக்கப்பட்டால் நாம் அதனைப் பரிசீலனை செய்யத் தயாராக உள்ளோம்" எனவும் திரு. மகேந்திரராசா தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## மாவீரர்களைக் கௌரவிக்க மக்கள் தயாராகின்றனர்

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டுக்கான தமிழீழ மாவீரர் வாரத்தை அனுஷ்டிப்பதற்கு தமிழீழ மக்கள் அனைவரும் தயாராகிவருகின்றனர்.

தமிழீழ தேசத்தின் விடுதலைக்காக தமது இன்னுயிர்களைத் தியாகம்செய்த மூவாயிரத்து ஐந்நூறுக்கும் மேற்பட்ட மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கும் தமிழர் தேசியத்தை உலகிற்கு உணர்த்துவதற்கான தேசிய தினமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் தமிழீழ மாவீரர் வாரத்தைச் சிறப்பாக அனுஷ்டிப்பதற்காக அடர்ந்த மாதகல் பிரதேசத்திலிருந்தே தமிழீழ மக்கள் தயாராகிவருகின்றனர்.

இதற்காக தமிழீழத்தின் அனைத்துப் பகுதிகளிலும் "மாவீரர் நினைவு வளைவு"கள் திருப்பமாக அமைக்கப்பட்டுவருவதுடன் மரம் நடும் முயற்சிகளும், சிரமதானஇயக்கமும் ஆரம்பிக்கப்பட்டுவருகின்றன.

யாழ்.மாவட்டத்தின் பெரும்பாலான சேந்திர இடங்களில் பெரியளவிலான மாவீரர் (4ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீது கடும் தாக்குதல்; தமிழ் மக்கள் மீது 'காருண்யம்'

இராணுவத்தின் புதிய தந்திரோபாயம்

"தமிழீழ மக்களின் தேசிய அந்தஸ்து அங்கீகரிக்கப்பட்டு, அவர்களது தேசிய அபிலாசைகள் பூர்த்தியாகும் வகையில் ஒரு தீர்வுத் திட்டம் முன்வைக்கப்பட்டால் நாம் அதனைப் பரிசீலனை செய்யத் தயாராக உள்ளோம்" எனவும் திரு. மகேந்திரராசா தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

உங்களது 26-09-1991 திகதியிடப்பட்ட கடிதம் கிடைத்தது. இந்த நிலவும் போர்ச்சூழ்நிலை காரணமாக உடன் பதில் எழுத முடியவில்லை. 'குவேக்கர்ஸ்' சமாதானக் குழுவினர் கொழும்பில் உங்களுடன் கலந்தாலோசனை நடத்திவிட்டு யாழ்ப்பாணம் வருகைதந்த பொழுது அவர்களை சந்தித்து எமது நிலைப்பாட்டை தெளிவாக விளக்கியிருந்தோம். அவர்கள் எமது கருத்துக்களை உங்களுக்குத் தெளிவாக எடுத்துரைத்தார்களோ தெரியவில்லை.

## சமாதானப் பேச்சிற்கு நிபந்தனை விதிக்கவில்லை

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு நாம் எவ்வித நிபந்தனைகளையும் விதிக்கவில்லை. எனினும் சமாதானப் பேச்சுக்கு முன்னோடியாக ஒரு அமைதியான, நல்லெண்ண சூழ்நிலை உருவாக்கப்படுவதன் அவசியத்தையும், முக்கியத்துவத்தையும் நீங்கள் நன்கு உணர்ந்திருப்பீர்கள் என நம்புகிறோம். ஆயினும் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் ஒரு நல்லெண்ண சூழ்நிலைக்கு ஒத்திசைவானதாக அமையவில்லை என்பது வெளிப்படையான உண்மை. இராணுவ ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் இரு முனைகளில் சிறிலங்கா அரசு தமிழ் மக்கள் மீது பாரிய அழுத்தத்தைப்பிர

(3ஆம் பக்கம் பார்க்க)

### காங்கேசன் துறைமுகம் திறப்பு

# முப்படை கூட்டு தலைமையகம் செஞ்சிலுவை இன்று பேச்சு

(கொழும்பு)

காங்கேசன் துறைமுகத்தை திறந்து யாழ் குடாநாட்டுக்கு அத்தியாவசியப்பொருட்களை அனுப்புவது சம்பந்தமாக முப்படை கூட்டுத் தலைமையக அதிகாரிகளுடன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் இன்று கொழும்பில் சந்தித்து பேச்சுக்களை நடத்துவர்.

காங்கேசன் துறைமுகத்தை திறந்து விடுவதற்கு விடுதலைப் புலிகள் அனுமதி வழங்கியுள்ளனர் என்பது தெரிந்ததே. துறைமுகத்தை பாதுகாப்பு பிரதேசமாக பிரகடனப்படுத்துவது, தமிழ் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவது, போக்குவரத்து பாதையைப் பாதுகாப்பது சம்பந்தமாக இப்பேச்சுகள் நடைபெறும்.

### பட்டதாரி பயிலுனர் ஆசிரியர்

# பரீட்சை நிலையங்கள் வட,கிழக்கில் அமைக்கப்படும்

புதிதாகச் சேர்க்கப்படும் பட்டதாரி பயிலுனர் ஆசிரியர்களுக்கான பரீட்சை நிலையங்கள் வடக்கிலும், கிழக்கிலும் அமைக்கப்படவுள்ளன.

போட்டிப்பரீட்சைகள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, திருக்கோணமலை, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, வவுனியா, மன்னார், அம்பாறை ஆகிய நகரங்களில் நடைபெறும்.

விஞ்ஞான, கணித ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான பரீட்சை எல்லா மாவட்டங்களிலும் முக்கிய நகரங்களில் நடைபெறும். இப்பரீட்சை பொதுவாக உதவி அரசாங்க அதிபர் பிரிவு மட்டத்தில் இடம்பெறும்.

இப்பரீட்சைகள் மூலம் தெரிவு செய்யப்படுபவர்களில் அடுத்த ஆண்டு முற்பகுதியில் 35,000 பேர் ஆசிரியர்களாக நியமனம் பெறுவர்.

## வருடாந்த இடமாற்றம்

(திருக்கோணமலை)

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் உள்ளூராட்சிசேவை திணைக்களத்தைச் சேர்ந்த ஊழியர்களின் வருடாந்த இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் இந்த இடமாற்றக் கடிதங்கள் ஒக்டோபர் இருபத்தி எட்டாம் திகதியிடப்பட்டு அனுப்பப்பட்டிருக்கின்றன

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் மக்கள் மீது 'காருண்யம்'

## இராணுவத்தின் புதிய தந்திரோபாயம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் மீது கடும் தாக்குதலை மேற்கொள்ளும் அதேவேளை தமிழ் மக்கள் மீது காருண்யத்துடன் நடந்து அவர்களைத் தம்பக்கம் வென்றெடுக்கும் ஒரு புதிய தந்திரோபாயத்தை சிறிலங்கா இராணுவம் வகுத்துள்ளதாகத் தெரிகிறது. இராணுவ உயரதிகாரிகளை மேற்கோள் காட்டி இத்திட்டம்பற்றிய செய்தியைக் கொழும்பில் பிரசுரமாகும் 'சண்டே ஐலண்ட்' பத்திரிகை வெளியிட்டுள்ளது. இப்பத்திரிகைச் செய்தியில் மேலும்,

சிறிலங்காகூட்டுப்படை நடவடிக்கைத் தலைமை புதுப்பிக்கப்பட்டு இராணுவ அமைப்பிலும் பல முக்கியமான மாற்றங்கள் செய்யப்படவுள்ளன. இதனால் விடுதலைப்புலிகளுக்

(4ஆம் பக்கம் பார்க்க)

## 4 தமிழர் சுட்டுக் கொலை அம்பாறையில் சம்பவம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தைச் சுற்றி வளைத்த சிறிலங்கா இராணுவத்தினரால் நான்கு தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள கஞ்சிக்குடிச்சாறு மற்றும் மகிழ்ந்த ஆகிய பகுதிகளைச் சுற்றி வளைத்த சிறிலங்கா இராணுவத்தினரே இப்பகுதிகளில் வைத்து நான்கு தமிழர்களை சுட்டுக் கொன்ற

(4ஆம் பக்கம் பார்க்க)

# ஏழாவது சார்க் உச்சி மாநாடு: இறுதி நேரத்தில் குழம்பும் நிலையில்

## நரசிம்மராவும் கொழும்பு வருவது சந்தேகம்

(டில்லி)

கொழும்பில் ஏழாவது 'சார்க்' உச்சி மாநாட்டிற்கான ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ள இந்தவேளையில், உச்சி மாநாடு நடைபெறுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. பூட்டான் மன்னர் வாங்சுக் இந்த உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதில்லையென அறிவித்ததைத் தொடர்ந்து இந்திய பிரதமர் நரசிம்மராவும் மாநாட்டில் கலந்து கொள்ள மாட்டார் எனத் தெரியவருகிறது.

பூட்டான் நாட்டின் மன்னர் தமது உள்நாட்டு அரசியல் நெருக்கடி காரணமாக இம்மாநாட்டில் தான் கலந்து கொள்ள முடியாது என்று அறிவித்ததைத் தொடர்ந்து இம்மாநாட்டிற்கான ஏற்பாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தியது.

அங்கத்துவ நாடொன்றின்

(4ஆம் பக்கம் பார்க்க)

### பாகிஸ்தான், நேப்பாள

## வெளியுறவு அமைச்சர்கள் கொழும்பு வரவில்லை

சார்க் மாநாட்டிற்கான ஆரம்ப ஏற்பாடாக நேற்று கொழும்பில் ஆரம்பமாகிய வெளியுறவு அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டத்தில் பூட்டான், நேபாளம் ஆகிய இரு நாடுகளின் வெளியுறவு

(4ஆம் பக்கம் பார்க்க)

## நேபாள மன்னர் பயணம் ஒத்திவைப்பு

இவ்வாரம் ஆரம்பமாகவிருக்கும் சார்க் மாநாட்டிற்காக கொழும்பு வரவிருந்த நேபாள மன்னர் தனது பய

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்


**ஜீவிதா**

**தொழில் நுட்பக் கூடம்**

ரீ. வி. டெக், றேடியோ, மணிக்கூடு, தையல்மெஷின் மற்றும் எல்லா உபகரணங்களும் திருத்துபவர்களும் விற்பனையாளர்களும் வீடியோவிடிக் படப்பிடிப்பாளர்களும். புதிய மழையபாடல்களும் (புரட்சிப் பாடல்கள்) பதிவு செய்து கொடுக்கப்படும். ஓட்டுமடம் சந்தி, ஓட்டுமடம். யாழ்ப்பாணம். (B/8489


## நாளை செய்முறைப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

கடந்த 89 டிசெம்பர் கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரணதர) பரீட்சை கர்நாடக சங்கீத பரத நாட்டிய செய்முறைப் பரீட்சைகள் நாளை 7-11-91 ஆம் திகதி முதல் நடைபெற உள்ளன. பாடசாலைகளிலிருந்து விண்ணப்பித்த பாடசாலைப் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகளை அதிபர்கள் கல்வித் திணைக்களத்திலிருந்து உடனடியாகப் பெற்று பரீட்சார்த்திகளுக்கு விநியோகிக்கும் படி யாழ். கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

செய்முறைப் பரீட்சைக்கு ஒதுக்கப்பட்ட தினத்திலிருந்து பிறிதொரு தினம் வழங்கப்பட மாட்டாது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (நி)


கணித விஞ்ஞான ஆசிரியர்களுக்கான போட்டிப் பரீட்சை பயிற்சி வகுப்புக்கள்

ஆரம்பம் 15.11.91 (2 மணி)

விரிவுரையாளர்கள்:
அ. குமாரவேலு
க. குணராஜா

இதற்கான விண்ணப்ப படிவத்தினையும் விபரத்தினையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

புதிய உயர் கல்லூரி

அரியாலைச்சந்தி, யாழ்.


(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யோசித்து வருகிறது ஒருபுறம் தமிழ் மண்ணில் இராணுவ விரிவாக்கத்தை நடத்திக் கொண்டு, மறுபுறம் பொருளாதார நெருக்குதலையும் தீவிரப்படுத்தி எமது மக்கள் மீது தாங்கொணாத் துன்பப் பழுவை சுமத்தி வருகிறது. இவ்விதமான இராணுவ- பொருளாதார நெருக்குதல் நிலை சமாதான அணுகுமுறைக்கு பாதகமாகவே அமையும். ஏனென்றால் இந்த நெருக்குதல் நிலை தமிழர் மீதான ஒரு அழுத்தமாக திணிக்கப்படுவதால் இச்சூழலில் சமத்துவமான, சுதந்திரமான பேச்சுக்கள் நிகழ்வது கடினம்.

## அழுத்த அணுகுமுறை கைவிடப்பட வேண்டும்

தமிழர் பிரச்சினைக்கு உருப்படியான, நிரந்தரமான தீர்வைக்காண அரச தரப்பில் உண்மையான, நேர்மையான அக்கறை இருக்குமாயின் இந்த இராணுவ - பொருளாதார அழுத்த அணுகுமுறை கைவிடப்படவேண்டும். தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையைத் தோற்றுவிக்கும் வகையில் ஒரு நல்லெண்ண சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும்.

ஒரு சமரச சூழ்நிலையில்தான் சமாதானப் பேச்சுக்களை நடத்தலாம் என்பதை நாம் உங்களுக்கு விளக்கிக் கூறத் தேவையில்லை. இதற்கு மாறாகத் தமிழ் மண்ணில் இராணுவ மேலாதிக்கத்தைத் திணித்து, பொருளாதாரத் தடைகளை இறுக்கித் தமிழ் மக்களைத் துப்பாக்கி முனையில் நிறுத்தி, தான் வரித்த வரையறைகளுள், தான் விதித்த நிபந்தனைகளுள் பிரச்சினையைத் தீர்க்கலாமென அரசு சிந்திக்குமானால், அது மாபெரும் அரசியல் தவறாகவே முடியும். இத்தகைய அணுகுமுறையை விடுதலைப் புலிகள் இயக்கம் ஒருபொழுதும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை.

## யாழ். வந்திருப்பின் மக்கள் விபரம் அறிந்திருப்பீர்கள்

யாழ்ப்பாணத்திற்கு உங்களை வருமாறு நாம் அழைப்பு விடுத்திருந்தோம்; கடிதங்கள் மூலம் கருத்துப் பரிமாற்றங்களை வைத்துக்கொள்வதைவிட நேரடியாகச் சந்தித்துப் பேசினால் எமது நிலைப்பாட்டை நீங்கள் ஆழமாகப் புரிந்து கொள்ளமுடியுமென நாம் எண்ணினோம். அத்தோடு எமது மக்களது கருத்துக்களைகேட்டறியவும் அவர்கள் எதிர்கொள்ளும் மோசமான வாழ்க்கை நிலையை நேரில் கண்டறியவும் இந்த விஜயம் நல்லதொரு வாய்ப்பாக அமைந்திருக்கும். ஆனால் நீங்கள் கொண்டுள்ள நிலைப்பாடு வேறுவிதமாக இருக்கிறது. அதாவது ஒரு பொதுவான மூலத் திட்டத்தில் முதலில் இணக்கம் கண்டு, அதன் அடிப்படையில் பேச்சுக்கள் ஆரம்பமாக வேண்டும் எனக்கருதுகிறீர்கள் இது குறித்து சில யோசனைகளையும் முன்வைத்து அதற்கு எமது கருத்துக்களையும், கேட்கிறீர்கள்.

## இ. தொ. காங்கிரஸ் - புலிகள் பேச்சாகவே அமையும்.

எமக்கு சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகள் அரசின் அனுசரணை அற்றதுஎன்பதைகுறிப்பிடும் நீங்கள் இந்தக் கருத்துக்கள் முற்றுமுழுதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பானது என்பதை வலியுறுத்துகிறீர்கள்; இது எமக்கு ஏமாற்றத்தைத் தருவதாக இருக்கிறது. ஏனென்றால் நீங்கள் முன்வைத்த கருத்துகளுக்கு ஆளும் கட்சியினதோ அல்லது சிங்கள எதிர்க்கட்சிகளினதோ ஒப்புதல் இருப்பதாகத் தெரியவில்லை. இந்த நிலையில், இந்த யோசனைகள்பற்றி நாம்கருத்துப்பரிமாற்றம் செய்துகொள்வது விடுதலைப்புலிகளுக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்கும் மத்தியில் நிகழும் பேச்சுக்களாகவே கருதப்படும்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் நீங்கள் சமர்ப்பித்த கருத்துக்களில் முற்போக்கான வரவேற்கத்தக்க அம்சங்கள் அடங்கியுள்ளன. இவைபற்றி எமது முழுமையான விமர்சனத்தை தெரிந்துகொள்வதற்கு முன்னர் இந்தக் கருத்துக்கள் குறித்து ஆளும் கட்சியினதும் எதிர்க்கட்சிகளினதும் நிலைப்பாடு எப்படியாக உள்ளது என்பதை நீங்கள் முதலில் அறிந்திருப்பது அவசியம் அல்லவா?

## ஆவணிமாத ஒய்வூதிய மூலப்பிரதியைப் பெறவும்

(மண்டைதீவு)

வேலணை ப. நோ. கூ. சங்க கிராமிய வங்கியில் ஆவணி மாதத்திற்கான ஒய்வூதியத்தை இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் ஒய்வூதிய வவுச்சர் மூலப்பிரதியை யாழ்ப்பாணத்தில் கோணாந்தோட்டத்தில் அமைந்துள்ள அவர்களது தற்காலிக அலுவலகத்தில் இயங்கும் கிராமிய வங்கியில் 10-11-91 இற்கு முன்னதாக பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளதாக சங்க பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார். (88)

## பட்டாசுக் கடையில் தீ; பதின்நான்குபேர்உயிரிழப்பு

(டில்லி)

டில்லிக்கு அருகே உள்ள பரிதாபாத் சந்தையில் பட்டாசுக் கடையொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் இரு குழந்தைகள் உட்பட பதின்நான்கு பேர் உயிர் இழந்து, 20 பேர் வரை பலத்த தீக் காயங்களுக்கும் உள்ளாகியுள்ளனர் என டில்லி பொலிசார் தெரிவித்துள்ளனர்.

பட்டாசு வெடித்ததன் மூலமாக ஏற்பட்ட தீ பக்கத்தில் உள்ள கடைகளுக்கும் பரவி விட்டதாகவும், இதனாலேயே பெருமளவு மக்கள் உயிரிழந்ததாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

## நலன்புரிச் சங்கம் பராமரிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த ஒருவார காலத்திற்கும் மேலாக யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் கொட்டடியைச் சேர்ந்த சு. கனகம்மா என்னும் மூதாட்டியை இதுவரை உறவினர் எவரும் கவனிக்கவில்லையெனத் தெரிகின்றது.

அநாதரவான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இவருக்கு நோயாளர் நலன்புரிச்சங்கத்தினர் உடுபுடைவை, உணவு மற்றும் பால்மா என்பவற்றை வழங்கிப் பராமரித்துவருகின்றனர்.

இவரது உறவினர்கள் அல்லது உரித்துடையவர்கள் எவரேனும் இருந்தால் நோயாளர் நலன்புரிச் சங்கத்துடன் தொடர்பு கொள்ளும்படி வைத்தியசாலை வட்டாரங்கள் கோரியுள்ளன.

## ஜேர்மனி. கால் இழந்தவர் உடுப்பிட்டி வாசியாம்

(கொழும்பு)

ஜேர்மனியில் கடந்த 14 ஆம் திகதி புதிய நாஜிக் குழுவினரால் தாக்கப்பட்டு ரயில் பாதையில் வீசப்பட்டவர் உடுப்பிட்டியைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சங்கரன் இராமகிருஷ்ணன் என்ற இவரது குடும்பத்தினர் தற்போது கொழும்பில் தங்கியுள்ளனர் என்றும் 'புங்கர்' என்ற இனவெறி அமைப்பைச் சேர்ந்தவர்களாலேயே இவர் தாக்கப்பட்டு வீசப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ரயில் பாதையில் இவர் மயங்கிய நிலையில் கிடந்த போது ரயில் மோதி இவர் ஒரு காலை இழந்தார்.

## தனியார் நிர்வாகத்திடம் தோட்டங்கள் பராமரிப்பு

### -இ. தொ. கா ஆதரவு

(கொழும்பு)

தனியார் நிர்வாகத்தின் கீழ் தோட்டங்களை நிர்வகிப்பது என்ற திட்டத்திற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவு அளித்துள்ளது.

கொண்டுவரும் நடவடிக்கையினை ஆதரிப்பது என இலங்கை தொழிலாளர் காங்கிரசின் நிர்வாகக்குழு ஏகமனதாக தீர்மானித்தது.

கடந்த வெள்ளிக்கிழமை ...


## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி





அமரர் திரு இ. சிவராசா
அதிபர்
[ந/ஞானோதயபாவித்தியாலயம்]
விண்ணுலகம்:- 19-05-87

திருமதி சி. பராசக்தி
ஓய்வு பெற்ற ஆசிரியை
[யா/சன்மார்க்கவித்தியாலயம்]
விண்ணுலகம்:- 21-10-87

திதி:- 6-11-91

எம் வாழ்வின் ஒளிவிளக்கே!
எந்தையே! எம் தாயே!
எங்கு நீங்கள் சென்று விட்டீர்கள்?
வையத்துள் வாழ்கின்றோம்
இது காலத்தின் நியதி
உங்களின் ஆத்மா எம்மை
என்றென்றும் வழி நடத்தும்!

கல்வியங்காடு   (R/1901)   இப்படிக்கு அன்புமக்கள்


## நினைவு கூருகின்றோம்...

1991 - 11 - 06

லெப். சுஜி



1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதியில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவு எய்திய

2-ம் லெப். ஜான் (சங்கரலிங்கம் இதயகுமார் சனுக்கேணி, முள்ளியவளை, முல்லைத்தீவு)

1987 ஆம் ஆண்டு திருக்கோணமலை, சாம்பல் தீவுப் பகுதியில் இந்தியப்படையினருடனான மோதலில் வீரச்சாவு எய்திய

கப்டன் குமார்/அத்தான் (செல்லத்துரை தயானந்தராசன் இலுப்பை, திருக்கோணமலை)

ஆரம்பம் 15.11.91
(2 மணி)

விரிவுரையாளர்கள்:
அ. குமாரவேலு
க. குணராஜா

இதற்கான விண்ணப்ப படிவத்தினையும் விபரத்தினையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளச்சந்தி, யாழ்.

(B/3436)



புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

A/L 91
DAY CLASSES

சகல பாடங்களுக்குமான வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன.

A/L 91 - சனி- ஞாயிறு வினா - விடை வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன

A/L 93 பிரிவு II
ஆரம்பமாகவுள்ளது

SPOKEN ENGLISH WITH GRAMMAR

புதிய பிரிவு ஆரம்பம்
9-11-91 [12மணி]

(B/3434)


...ரணை அற்றதுஎன்பதைகுறிப்பிடும் நீங்கள் இந்தக் கருத்துக்கள் முற்றுமுழுதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பானது என்பதை வலியுறுத்துகிறீர்கள். இது எமக்கு ஏமாற்றத்தைத் தருவதாக இருக்கிறது. ஏனென்றால் நீங்கள் முன்வைத்த கருத்துகளுக்கு ஆளும் கட்சியினதோ அல்லது சிங்கள எதிர்க்கட்சியினதோ ஒப்புதல் இருப்பதாகத் தெரியவில்லை. இந்த நிலையில், இந்த யோசனைகள்பற்றி நாம்கருத்துப்பரிமாற்றம் செய்துகொள்வது விடுதலைப்புலிகளுக்கும் இலங்கைத் தொழிலாளர் ...படும்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் நீங்கள் சமர்ப்பித்த கருத்துக்களில் முற்போக்கான வரவேற்கத்தக்க அம்சங்கள் அடங்கியுள்ளன. இவைபற்றி எமது முழுமையான விமர்சனத்தை தெரிந்துகொள்வதற்கு முன்னர் இந்தக் கருத்துக்கள் குறித்து ஆளும் கட்சியினதும் எதிர்க்கட்சியினதும் நிலைப்பாடு எப்படியாக உள்ளது என்பதை நீங்கள் முதலில் அறிந்திருப்பது அவசியம் அல்லவா?

## தேசிய அந்தஸ்து அங்கீகாரம் தேவை

தமிழீழ மக்களின் தன்னாட்சி உரிமையை நிலைநாட்ட நாம் உறுதியோடு ஆயுதமேந்திப் போராடிவருகிறோமென்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். ஆயினும் எமது போராட்டப் பாதையில் சமாதான அணுகுமுறைகளை நாம் ஒருபொழுதும் நிராகரித்ததில்லை. தமிழீழ மக்களின் தேசிய அந்தஸ்து அங்கீகரிக்கப்பட்டு அவர்களது தேசிய அபிலாஷைகள் பூர்த்தியாகும் வகையில் ஒரு தீர்வுத்திட்டம் முன்வைக்கப்பட்டால் நாம் அதனைப் பரிசீலனைசெய்யத் தயாராக இருக்கிறோம். இந்தக் கருத்தை நாம் பலதடவைகள் பகிரங்கமாகவே அறிவித்திருக்கிறோம். இப்படியான ஒரு நியாயமான நாகரிக உலகம் ஏற்றுக்கொள்ளும் முற்...

(4ஆம் பக்கம் பார்க்க)

## புங்குடுதீவில் ஒருவர் சுட்டுக் கொலை

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவுப் பகுதியில் இராணுவத்தினரால் பொதுமகன் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

புங்குடுதீவுப் பகுதியில்நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினரால் அங்கு அவர்களது சுற்றிவளைப்பின் போது சிக்குண்டவரே இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

இப்பகுதிகளிலுள்ள தமிழ் மக்களின் வீடுகள் யாவும் சூறையாடப்பட்டபின் சிறிலங்கா இராணுவத்தினரால் எரிக்கப்படுகின்றன. இராணுவத்தினர் தமக்கு தேவையற்ற பொருள்களை வீதிகளில் வீசியுள்ளனர்.

...சங்கரன் இராமகிருஷ்ணன் என்ற இவரது குடும்பத்தினர் ... போது ரயில் மோதி இவர் ஒரு காலை இழந்தார்.

## தனியார் நிர்வாகத்திடம் தோட்டங்கள் பராமரிப்பு

### -இ. தொ. கா ஆதரவு

(கொழும்பு)

தனியார் நிர்வாகத்தின் கீழ் தோட்டங்களை நிர்வகிப்பது என்ற திட்டத்திற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவு அளித்துள்ளது.

ஜனதா தோட்ட அபிவிருத்திச் சபை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் கீழ் நிர்வகிக்கப்படும் தோட்டங்களை தனியார் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரும் நடவடிக்கையினை ஆதரிப்பது என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிர்வாகக்குழு ஏகமனதாக தீர்மானித்தது.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிர்வாகக் குழு கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது இக்கூட்டத்திற்கு இ. தொ. கா தலைவர் எஸ். தொண்டமான் தலைமைவகித்தார்.

## யாழ். குடாநாட்டில் முத்திரைகளுக்கு தட்டுப்பாடு

(நல்லூர்)

யாழ்ப்பாணத்தில் முத்திரைக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது பிரதம தபாற்கந்தோரிலும் ரூபா 1க்கு மேல் எவ்வகை முத்திரைகளும் இல்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. உபதபாற் கந்தோர்களிலும் இதே நிலைதான்.

தற்போது பயிலுனர் ஆசிரியர்களுக்கான போட்டிப் பரீட்சை விண்ணப்பப் படிவங்களுக்கு ரூபா 50 முத்திரை ஒட்ட வேண்டும் என்று கல்விச்சேவை ஆணைக்குழு கோரியுள்ளதால் பல பரீட்சார்த்திகள் முத்திரை தேடி அலைவதைக் காணமுடிகிறது. மேலும் விண்ணப்பப் படிவங்களில் ஒவ்வொரு ரூபா வீதம் ஒட்டவும் இடம் போதாமலுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

முத்திரை கையிருப்பில்லை என்றும் கொழும்பிலிருந்து முத்திரை வந்தால் முத்திரைத் தட்டுப்பாடு நீங்கலாம் என்றும் யாழ். தபாற்கந்தோர் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன

## புல்மோட்டையில் பல தமிழர் கைது

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள குச்சவெளி, புல்மோட்டை பகுதிகளில் வீதித் தடை சோதனைகளை மேற்கொண்ட சிறிலங்கா இராணுவத்தினர் பல தமிழ் மக்களை கைது செய்து முகாமுக்குக் கொண்டு சென்றுள்ளனர்.



1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதியில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவு எய்திய

2-ம் லெப். ஜான் (சமரலிங்கம் இதயகுமார் சுணுக்கேணி, முள்ளியவளை, முல்லைத்தீவு)

1987 ஆம் ஆண்டு திருக்கோணமலை, சாம்பல்தீவுப் பகுதியில் இந்தியப்படையினருடனான மோதலில் வீரச்சாவு எய்திய

கப்டன் குமார்/அத்தான் (செல்லத்துரை தயானந்தரூபன் நிலாவெளி, திருக்கோணமலை)

ஜெறோம் (சரவணமுத்து குகதாசன் புணாவில், கைதடி)

1988 ஆம் ஆண்டு கிளிநொச்சி, உமையாள்புரம் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கையின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவு எய்திய

வேதா/பவுண் (தில்லையம்பலம் துரைராஜசிங்கம் - புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு)

1990 ஆம் ஆண்டு மாவிட்டபுரம், வீமன்காமம் பகுதியில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவு எய்திய

லெப். சுஜி (பொன்னுத்துரை நாகஜீவா 3/6, பரப்புக்கடந்தான் மன்னார்)

மதன் (ராஜப்பு ஆகஸ்ரின் சதிக்குமார் புலோப்பளை கிழக்கு, பளை)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/3438)

என்றும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும் ஆக்கிரமிப்பிலேயே போய் முடிந்தன.

தற்பொழுது சிறிலங்கா இராணுவத்தினர் கட்டுப்பாட்டில் உள்ள இடங்களில் அபிவிருத்தி என்றால் அது பிரதானமாக சிங்களவர்களை குடியமர்த்துவதாகவே இருக்கும். ஏனெனில் சிறிலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் அநேகமாக தமிழர் தற்பொழுது இல்லை. அங்கு அவர்கள் வீடுகளில் வாழ அஞ்சுகின்றார்கள். அதேவேளை அவர்களின் கிராமங்களில் அவர்களின் வீடுகளும் இல்லை. அவர்கள் அகதிகளாக வெளியேறிவிட்டார்கள் / வெளியேற்றப்பட்டு விட்டார்கள். இருப்பவர்களும் அகதி முகாம்களிலேயே வாழ்கின்றார்கள். அவர்கள் திரும்பிச் சென்று வாழ்வதற்கு உயிருக்கு உத்தரவாதம் இல்லை. இராணுவத்தினரும் சிங்கள, முஸ்லிம் காடையர்களும் அவர்களது உயிருக்கு அச்சுறுத்தலாக உள்ளனர்.

உயிருக்கு உத்தரவாதம் இல்லாத இந்நிலையில் அபிவிருத்தியைப் பற்றிப் பேசுவது வேடிக்கையானதாகும். இதிலிருந்தே சிங்கள அரசியல்வாளர்கள் பேசும் அபிவிருத்தியில் தமிழருக்கு பங்கில்லை என்பதைப் புரிந்து கொள்ளலாம். அதாவது தமிழர்களைப்பற்றி அரசாங்கம் பேசவில்லை என்பதைப் புரிந்துகொள்ளலாம். ஆனால் அவர்கள் தமிழ் மண்ணைப் பற்றிப் பேசுகிறார்கள் என்பது மட்டும் உண்மை. இதை உணர்த்துவதுபோல் உள்ளது இம்மாத ஆரம்பத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் பணியாற்றும் சிங்கள உதவி அரசாங்க அதிபர்களுக்கான கருத்தரங்காகும். இக் கருத்தரங்கில் வடக்கு கிழக்கில் சிங்கள மக்களுக்கான காணி விநியோகம் பற்றி ஆராயப்பட்டுள்ளது. வவுனியா மாவட்டத்தில் சிங்கள அரசாங்கம் மேற்கொள்ளவுள்ள அபிவிருத்தி பற்றிய பேச்சும் இவ்வாறானதே.

வவுனியா மாவட்டத்தில் மூன்றில் இரண்டு பகுதிக்கு மேல் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும்போது அம் மாவட்டத்தின் அபிவிருத்தியைப் பற்றிப் பேசுவதென்பது இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியை சிங்கள மயப்படுத்தல் என்பதையே குறிக்கும். வவுனியாக் கிராமங்களில் மூன்றிலொன்று இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருப்பினும் இங்கு சிங்கள கிராமங்கள் தவிர்ந்த தமிழ் கிராமங்களில் மக்கள் இல்லை. இந்நிலையில் அந்த நிலங்களை கபளீகரம் செய்வதே இத் திட்டங்களின் அடிப்படை நோக்கமாகும்.

இராணுவத்தைவிட ஆக்கிரமிப்பிற்கு குடியேற்றங்களே சக்தி வாய்ந்தவை என்பதை சிங்கள ஆக்கிரமிப்பாளர்கள் உணர்ந்துள்ளார்கள். வடக்கில் இராணுவத்தால் சாதிக்க முடியாததை கிழக்கில் குடியேற்றங்கள் சாதித்துள்ளன. இதனைத் தொடர்வதே சிறிலங்கா அரசாங்கத்தின் நோக்கம். அதற்கான வழிமுறையே தற்போதைய புதிய அபிவிருத்தி என்ற பேச்சு. ஆனால் அன்றைய சூழ்நிலை இன்றில்லை என்பதை வெலி ஓயா அனுபவத்தைக் கொண்டு சிறிலங்கா அரசாங்கம் புரிந்துகொள்ள வேண்டும்.

---

என்பது கிரேக்கம், ரோம் ஆகிய நாடுகளின் உன்னத பண்பாட்டிற்கு அந்நாடுகளின் சமூகங்களிடையே ஆக்கம் பெற்ற பேரிலக்கியங்களே காரணம் என அறிஞர் கொள்வர். எமது தமிழ்மொழியும் பழைமை வாய்ந்த கலை பண்பாட்டுக்கும் மரபுகளை உடையதென்பதை எமது மொழியிலுள்ள பழம் பெரும் இலக்கியங்களாலும் வேறு கலை அம்சங்களாலும் உணர்ந்து கொள்ளலாம்.

எமது வாழ்க்கை முறையிலும் பண்பாட்டு வளர்ச்சியிலும் அவற்றின் எல்லா நிலைகளிலும்/ நுண்கலையில் முதன்மையானதான இசை இணைந்து வந்துள்ளது. பிறப்பு முதல் இறப்பு வரை தாலாட்டில் தொடங்கி ஒப்பாரி ஈறாக, எமது வாழ்க்கை நிகழ்வுகளுடன் இணைந்து எமது வாழ்க்கையிலிருந்து பிரிக்க முடியாத ஓர் அம்சமாக இசை இருந்து வந்துள்ளது; இருந்து வருகின்றது. இசைக்கு ஓர் அதீத சக்தி உண்டு. இச்சக்தியின் மூலம் எதையும் சாதிக்கலாம். இசைப் பாடல்களால் இறைவனை ஏற்றி வழிபடும்போது அந்தஇசையால் இறைவனைப் போற்றி இறையருளைப் பெறலாம். அந்த இறைவனை அணுகலாம் என்ற நம்பிக்கைகள் எம்மிடையே வளர்ந்து வந்துள்ளன. இசைக்குத் தலைவணங்கி இன மாமன்னர்களையும் கூட எமக்கு வரலாறு காட்டுகின்றது. நாயன்மார்களும் சமய போதகர்களும் இசையை கருவியாக கொண்டே சமயத்தை வளர்த்தனர். சமய வழிபாடுகளில் இசைப் பாடல்களே அனைவரையும் ஒருமுகப்படுத்தி ஒருவழிப்படுத்தின. எனவே தான் இசையானது தெய்வீக நிலையில் வைத்துப் பூஜிக்கப்படுகின்றது.

கலைமரபைப் வளர்க்கவும் முயற்சிக்க வேண்டும். எனவும் கலை நெகிழ்ச்சிக்கு இடமளித்தே வளர வேண்டும் மாற்றம் இன்றேல், வளர்ச்சி இல்லை "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே" என்பது நன்னூல் சூத்திரம். கடிசொல் இல்லை காலத்துப்படினே என்பது தொல்காப்பியர் வாக்கு.

எமது இசை மரபிலே ஏற்படும் மாற்றங்கள் எமது பண்பாட்டைச் சிதைக்காது உலக அரங்கின் கவனத்திற்குரியதாக இருப்பின் அவை சிறப்புக்குரியனவே. இந்த வகையில் இன்றைய இசையருவி நாதஸ்வர இசை ஒலிப்பதிவு நாடாவிலே தவில், மிருதங்கம், ஆகிய இசைக்கருவிகளுடன் வயலின், தபேலா உட்பட மேற்கத்தைய இசைக்கருவிகளையும் இணைத்துள்ளமை விசேட கவனம் பெறுகின்றது. இதன் மூலம் எமது இசைக்கலை வளர்ச்சி நிருபணமாகின்றது. பிறநாட்டு நல்லறிஞர் சாஸ்திரங்கள் தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும் என்ற புதுமைக்கவி பாரதியின் அவா கூட இங்கே ஒரு வகையில் நிறைவேற்றப்படுகின்றது இதனால் எமது கலை மரபை பிறநாட்டவரும் ரசிக்கக்கூடிய வாய்ப்பும் ஏற்படுகின்றது இத்துறையில் நாம் மேலும்வளர்ச்சியும் விருத்தியும் எய்த வேண்டும் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பதற்கேற்ப இந்த இசையருவிநாடாவை யாவரும் கேட்டு மகிழக்கூடிய விதத்தில் அமைந்திருக்கிறது.

இந்த இசைநாடாவின் மற்றுமொரு சிறப்பம்சத்தையும் இங்கே நான் குறிப்பிட வேண்டும். சாஸ்திரிய முறையில் இசைக்கலை பயின்றவர்களிடையே தம் கலையே ஏனையவற்றை விட உயர்ந்தவை என்ற மனப்பாங்கும் ஏனைய மேற்கத்தைய இசைக்கருவிகள் எமது இசைக்கருவிகளு

---

# மிகுதிப்பணம் வழங்க இலங்கை வங்கி ஏற்பாடு

(கொழும்பு)

வளைகுடா யுத்தத்தை அடுத்து நாடு திரும்பியவர்கள் இலங்கை வங்கியில் குவைத் டினார்களை செலுத்தி மாற்றிப் பெற்றுக்கொண்ட பணத்தின் மிகுதியை வழங்குவதற்கு இலங்கை வங்கி ஏற்பாடு செய்துள்ளது.

இதன்படி 70,000 பேருக்கு இந்த மிகுதிப்பணம் வழங்கப்படும் என்றும், மத்திய வங்கியின் உத்தரவுப்படி ஒரு குவைத் டினாருக்கு 53 ரூபாய் 84 சதம் வழங்கப்படும் என்றும், வங்கியில் முன்னர் கொடுத்த குவைத் டினாருக்கு செலுத்திய தொகையை கழித்து மேலும் 27 ரூபாய் 69 சதத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாரஹேன்பிட்டியிலுள்ள தொழில் செயலகத்தில் குவைத் டினார்களை மாற்றிக் கொண்டவர்கள் தமது முன்னைய தஸ்தாவேஜுகள் பாஸ்போர்ட் அல்லது அடையாள அட்டைகளுடன் நுகேகொடையிலுள்ள வங்கிக் கிளையில் மாற்றிக்கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேநேரம் இக்கிளையில் பணம் எடுக்காதோர் முன்னர் மாற்றிக்கொண்ட வங்கிக் கிளைகளுக்குச் சென்று மிகுதிப்பணத்தை எடுத்துக் கொள்ளவேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## ராமஜென்ம பூமி—பாபர் மசூதி

# நீதிமன்ற தீர்ப்பை மாநில அரசு மதிக்கும்

(டில்லி)

'ராம ஜென்ம பூமி, பாபர் மசூதி பிரச்சினை குறித்து நீதிமன்றத்தின் முன்னுள்ள வழக்குகளில் அலகாபாத் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை மாநில அரசு மதித்து நடக்கும் என்று உத்தரப் பிரதேச முதலமைச்சர் கல்யாண் சிங் வாக்குறுதி அளித்தார்.

சனிக்கிழமை புதுடில்லியில் நடைபெற்ற தேசிய ஒருமைப்பாட்டுக் கவுன்சிலின் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே கல்யாண்சிங் இந்த வாக்குறுதியினை அளித்தார். தொடர்ந்து பேசிய அவர்,

இறுதித் தீர்வு காணப்படும் வரை கட்டிடத்தின்'' பாதுகாப்பிற்கு மாநில அரசு முழுப் பொறுப்பு ஏற்பதாகவும் அவர் உறுதியளித்தார்.

நிலம் கையகம் படுத்துவது தொடர்பான நீதி மன்ற ஆணைகள் முழுமையாக செயல்படுத்தப்படும், சமூகமான தீர்விற்கு கான எல்லா வகை நடவடிக்கைகளும் எடுக்கப்படும்என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருடம் வி.பி. சிங் தலைமையிலான அரசாங்கம் வீழ்வதற்கு காரணமாக இருந்த பாரதிய ஜனதாக் கட்சி அப்போது நீதிமன்றத் தீர்ப்பை ஏற்க மறுத்து ரதயாத்திரையை மேற் கொண்டது தெரிந்ததே. அதே கட்சி இன்று நீதிமன்றத் தீர்ப்பை ஏற்பதாக உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பல்கலை. கல்லூரிகள் 20ஆம்திகதிமுதல் ஆரம்பம்

ஒருங்கிணைந்த பல்கலைக் கழக கல்லூரிகள் இம்மாதம் இருபதாம் திகதி முதல் சகல மாகாணங்களிலும் இயங்க ஆரம்பிக்கவுள்ளன.

உயர் கல்வி அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீத் தலைமையில் நேற்று இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் மேற்படி பல்கலைக்கழக கல்லூரிகளை இயங்க வைப்பது பற்றியும் இக்கல்லூரிகளின் செயற்பாடுகள் பற்றியும் விரிவாக ஆராயப்பட்டது.

அதேவேளை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பல்கலைக்கழக கல்லூரிகளின் அனுமதிக்காக மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

# வெளிச் சந்தையில் சீனி விற்பனைக்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

பங்கீட்டுக்கு மேலதிகமாக குடும்பங்களுக்கு சீனி தேவை எனை பலர் கோரியதை அடுத்து தற்பொழுது கொம்படி மூலமாகக் கொண்டுவரப்பட்ட சீனி பல பகுதிகளிலும் விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக செயலகம் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

ஒரு கிலோ சீனி 40ரூபா என்ற அடிப்படையில் உதயம் பல்பொருள் அங்காடி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம் மொத்த விற்பனைக் களஞ்சியம், பொற்பதி வீதிச் சந்தி, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி போன்றவற்றில் விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

**மாவீரர்களை**

வணங்குகின்ற அமைக்கும் பணிகள் கடந்த சில நாட்களாக சுறுசுறுப்படைந்திருக்கின்றது. பலதரப்பட்ட மக்களும் மேற்படி வேலைகளை மேற்கொள்வதில் மிகுந்த ஆர்வம்காட்டி வருகின்றனர்.

குடாநாட்டின் சில பகுதிகளில் மாவீரர்வாரத்திற்கான சகல முன் ஏற்பாடுகளும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கின்றன.

இதேபோல கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா போன்ற மாவட்டங்களிலும் மாவீரர் வாரத்திற்கான ஆரம்ப ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (க)

**வெளியுறவு**

அமைச்சர்கள் கலந்து கொள்ளவில்லை.

முன்னர் இருதடவைகள் ஒத்திப்போடப்பட்ட இக்கூட்டத்திற்கு இந்தியாவும் பாகிஸ்தானும் தமது துணை வெளியுறவு அமைச்சர்களை அனுப்பி வைத்துள்ளன.

அதேவேளை கொழும்பில் உச்சி மாநாட்டிற்கான அதிகாரபூர்வமற்ற பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

**ஏழாவது**

தலைவர் வராது விட்டால் மாநாடுநடத்தப்பட முடியுமா என்ற கேள்வி பல நாட்டுத் தலைவர்களிடத்திலும் எழுந்திருக்கிறது.

அதேவேளை இந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவ் இம் மாநாட்டில் கலந்து கொள்ள மாட்டார் என்று தெரிகிறது அவர் இம்மாநாட்டில் ஒரு நாள் கலந்துகொள்வதாக இருந்தார் அது பூட்டான் மன்னர் இம்மாநாட்டில் கலந்து கொள்வாரா என்பதில் தங்கியிருப்பதாகவும் பூட்டான் மன்னர் மாநாட்டில் கலந்து கொள்ளாவிட்டால் இந்தியப்பிரதமர் மேற்படி மாநாட்டில் கலந்து கொள்ளுதில் அர்த்தமில்லை என்று இந்திய அரசின் மூத்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனினும் இம்மாநாடு தொடர்பான இறுதி முடிவு மாநாட்டின் தற்போதைய தலைவர் மாலைதீவின் அரசுத் தலைவராலேயே எடுக்கப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

**நேபாள**

மன்னரை ஒத்திப் போட்டிருக்கிறார்.

இம்மாநாடு நடைபெறுமா என்ற குழப்பநிலை உருவாகியதைத் தொடர்ந்து நேபாள மன்னர் தனது கொழும்புவிஜயத்தை ஒத்திப்போட்டிருக்கின்றார்.

# அதிபர், ஆசிரியர் கருத்தரங்கு

(நமது நிருபர்)

மருதனாமடம், வடமராட்சி கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த அதிபர், ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

ஏழாலை, சுன்னாகம், உடுவில் கொத்தணிகளில் கடமை புரியும் அதிபர்கள் ஆசிரியர்கள் ஆகியோர் நாளை பிற்பகல் ஒரு மணிக்கு இராமநாதன் கல்லூரி மண்டபத்திற்கு சமுகம் தரும்படி பிரதிக் கல்விப் பணிப்பாளர் வேண்டியுள்ளார்.

இதேபோல் வல்வெட்டித்துறை உடுப்பிட்டி, கரவெட்டி நெல்லியடி கொத்தணிகளில் கடமை புரியும் அதிபர்கள், ஆசிரியர்கள் வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நெல்லியடி ம. ம. வி. மண்டபத்திலும், புலோலி, உடுத்துறை, பருத்தித்துறை கொத்தணியில் கடமை புரியும் அதிபர்கள் ஆசிரியர்கள் யாழ். வட. இந்து கல்லூரி மண்டபத்தில் வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒருமணிக்கும் சமுகம் தரும்படி பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**வருடாந்த**

மோதும் இதுவரை சம்பந்தப்பட்ட ஊழியர் பலருக்கு இந்த உத்தரவு கிடைக்கவில்லை எனத் தெரிகிறது.

உள்ளூராட்சி தொழிற்சங்கங்களின் ஒத்துழைப்பும், கலந்தாலோசனையும் இன்றி வடக்கு-கிழக்கு மாகாணத்தின் உள்ளூராட்சி திணைக்களம் தன்னிச்சையாக இந்த இடமாற்றங்களை மேற்கொண்டிருப்பதாக தெரிகிறது.

**சிறு**

என்பதற்குப் பதிலாக மதியமுகன் எனப் பிரசுரமாகியுள்ளது.

5-11-86 இல் வீரச்சாவு எய்திய மேஜர் கனேஷின் தோற்றம் 18-4-61 என்பதற்குப்பதிலாக 9-4-61 எனப்பிரசுரமாகியுள்ளது. இவ்விரு தவறுகளையும் திருத்திக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

**புலிகள்**

கெதிராக இராணுவத்தினால் கையாளப்படும் தந்திரோபாயத்தில் மாற்றங்கள் ஏற்படும் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகளைக் கடுமையாகத் தாக்கும் ஆக்கிரமிப்பு மனப்பான்மையுடைய தந்திரோபாயத்தைக் கையாளும் அதேவேளை யுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் வடக்குக் கிழக்கு மக்களின் மனதைத் தமது பக்கம் ஈர்க்கும் புதிய அணுகுமுறையை இராணுவம் கடைப்பிடிக்கவுள்ளதாக முதுநிலை இராணுவ அதிகாரிகளால் மேலும்

# கிராம சேவகர் பிரிவுகள்தோறும் பாவனையாளர் பாதுகாப்புக் குழு

பாவனையாளர் பாதுகாப்புக் குழுக்களின் காரியாலயங்கள் ஒவ்வொரு கிராமசேவையாளர் பிரிவு மட்டத்திலும் திறக்கப்பட்டு வருகின்றன. கிராமசேவையாளர் பொது அமைப்புப் பிரதிநிதிகள் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கக் கிளை உறுப்பினர், வர்த்தகர்கள் ஆகியோரில் தலா ஒருவர் கிராமசேவையாளர் பிரிவிலான இக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர். இக்காரியாலயத்துடன் தொடர்பு கொள்வதன் மூலம் பாவனையாளர்கள் தமது தேவைகளை பூர்த்தி செய்யமுடியும் இதற்றவகையில் இக் காரியாலயத்தில் எந்நேரமும் ஒருவரை கடமையில் ஈடுபடுத்து வதற்கான ஒழுங்குகளை பாவனையாளர் பாதுகாப்புக் குழு அமைப்பாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

விசேடமாக அல்லது திடீரென பாவனையாளர்களுக்கு ஏற்படும் தேவைகளை இக் காரியாலயங்கள் மூலம் பூர்த்தி செய்ய முடியும்.

**தேசியக்**

இத்தேசியக்கொடி தேசிய இனத்தின் பண்புகள், ஆட்சி, இறைமை உட்பட இந்த நாட்டைக் குறிக்கின்ற ஒட்டுமொத்தமான பொதுச் சின்னமாக விளங்குகிறது.

எந்த ஒரு நாட்டின் சிறப்பு நிகழ்ச்சிகளின் போதும் நாட்டின் தலைவர், படை, அரசபணியாளர், மற்றும் மாணவர்கள் அனைவரும் வணக்கம் செய்கின்றனர். தேசியக் கொடிக்கு வழங்கப்படும் மதிப்பு, சிறப்பு என்பன அந்த நாட்டைச் சென்றடைவது போல தேசியக் கொடிக்கு ஏற்படுத்தப்படும் இழிவு, புறக்கணிப்பு என்பனவும் அந்த நாட்டையே சென்றடைகின்றது.

எனவே இவ்வாண்டு மாவீரர் நாளில் எமது தமிழீழத் தேசியக்கொடியேற்றும் வைபவங்களை உரிய முறையில் மேற்கொண்டு எமது தேசியக் கொடியை வணங்குவதன் மூலம் எமது நாட்டையும் சுதந்திரத்தையும் மதிப்பவர்களாக நாம் செயற்படுவது மிகவும் அவசியமானதாகும் என்று அச் செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருக்கிறது

தற்போதைய இராணுவத் தளபதியாக இருக்கும் லெப்டினன்ட் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா நவம்பர் 15 ஆம்திகதியன்று கூட்டுப்படை நடவடிக்கைத்தலைமைச் செயலகப் பொறுப்பதிகாரியாக நியமனம் பெறுகிறார் இவ்விடத்தை ஜெனரல் சிசில் வைத்தியரெட்ண நவம்பர் 15இல் பொறுப்பேற்கவேண்டுமானாலும் அதற்கு முன்னரே அவர் இந்தப் பதவியைப் பொறுப்பேற்கக் கூடும் என்று பாதுகாப்பு வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகின்றது

லெப். ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா ஒரு முழுமையான

# கடன் அடிப்படையில் பொருள் வாங்க வசதி

அரச, தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள் கடன் அடிப்படையில் பொருட்களை பெற்றுக் கொள்வதற்கான ஒழுங்குகளை பாவனையாளர் பாதுகாப்புக்குழுக்கள் மேற்கொண்டு வருகின்றன குறிப்பிட்ட நிறுவனத்தின் முகாமையாளரோ, அல்லது பொறுப்பு வாய்ந்த அதிகாரியோ செய்யும் சிபாரிசின் அடிப்படையில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் ஊழியர்கள் கடனாகப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள முடியும். பின்னர் இக் கடன் தொகையை ஊழியர்களின் வேதனத்திலிருந்து அறவிடுவதற்கான ஒழுங்குகளை குறிப்பிட்ட நிறுவனங்கள் மேற்கொள்ள வேண்டும்

# இரவிலும் உணவுப்பொருள் கொள்வனவிற்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

ஒவ்வொரு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலும் தெரிந்தெடுக்கப்பட்ட சில கிளைகளில் இரவு 8 மணி வரை பொதுமக்களுக்கான விநியோகம் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன இக்கிளைகளில் குறிப்பிட்ட கிளையில் பொருட்களைப் பெறுபவர் மட்டுமன்றி பங்கீட்டு அட்டை மூலம் வேறு கிளைகளில் பொருட்களைப் பெறுவோரும் கொள்வனவு செய்ய முடியும் நாளாந்தக் கூலி பெறுவோர், காரியாலயங்களில் பணிபுரிவோர் ஆகியோரின் நலன் கருதியே இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன

# மணிலா வந்த இமெல்டா நீதிபதியிடம் சரணடைந்தார்

பிலிப்பைன்சின் முன்னாள் அதிபர் மார்க்கோசின் மனைவி இமெல்டா மார்க்கோஸ் நேற்று மணிலாவில் நீதிபதி ஒருவரிடம் சரணடைந்துள்ளார்.

வரி மோசடிக் குற்றத்திற்காக இவரைக் கைது செய்யும்படி பிலிப்பைன்ஸ் அரசாங்கம் விடுத்த உத்தரவைத் தொடர்ந்து இவ்வாறு அவர் சரணடைந்திருக்கின்றார்.

எனினும் இவர் பெரும் தொகையைப் பிணையில் விடுவிக்கப்படுவார் என்று எதிர்பார்ப்பதாக அரசு வழக்கறிஞர் தெரிவித்தார்

பிலிப்பைன்ஸ் திரும்பியதும் விமான நிலையத்தில் தம்மை வரவேற்க கூடியிருந்த சுமார் பத்தாயிரம் ஆதரவாளர்களிடையே அவர் பேசும்போது தான் பிலிப்பைன்சை நல்வழிப்படுத்துவதற்காக நாடு திரும்பியிருப்பதாக அறிவித்தார். அடுத்த ஆண்டுபொதுத் தேர்தலிலும் போட்டியிடுவதற்கும் அவர் விருப்பம் தெரிவித்திருந்தார்.

இவரது கணவர் மார்க்கோசின் சடலத்தை எடுத்துவர பிலிப்பைன்ஸ் அரசு இவருக்கு அனுமதி வழங்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது

**4 தமிழர்**

பின் பதினேழுக்கும்மேற்பட்ட தமிழர்களை கைது செய்து முகாமுக்கு கொண்டு சென்று அங்கு சித்திரவதைக்குட்படுத்தியதாக தெரிவிக்கப்படுகிறது

## (2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போக்கான தீர்வுத்திட்டங்களை சிங்கள அரசியல்வாதிகள் சாதகமாககருத்தில் எடுத்துக்கொள்வார்களா என்பதும் சந்தேகமே.

நிலைப்பாட்டினைமிகவும் கருக்கமாக எடுத்துக் கூறியுள்ளோம். உங்களது சமாதான முயற்சிக்கு இது பயனுள்ளதாக அமையும் என நம்பு

## மரண அறிவித்தல்

ருக்கின்றது.

நேபாள
னத்தை ஒத்திப் போட்டிருக்கிறார்.

இம்மாநாடு நடைபெறுமா என்ற குழப்பநிலை உருவாகியதைத் தொடர்ந்து நேபாள மன்னர் தனது கொழும்பு விஜயத்தை ஒத்திப்போட்டிருக்கின்றார்.

படி மாநாட்டில் கலந்து கொள்வதில் அர்த்தமில்லை என்று இந்திய அரசின் மூத்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனினும் இம்மாநாடு தொடர்பான இறுதி முடிவு மாநாட்டின் தற்போதைய தலைவர் மாலைதீவின் அரசுத் தலைவராலேயே எடுக்கப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

## (2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போக்கான தீர்வுத்திட்டங்களை சிங்கள அரசியல்வாதிகள் சாதகமாகக் கருத்தில் எடுத்துக்கொள்வார்களா என்பதும் சந்தேகமே.

இந்தக் கடிதத்தின் எமது நிலைப்பாட்டினை மிகவும் சுருக்கமாக எடுத்துக் கூறியுள்ளோம். உங்களது சமாதான முயற்சிக்கு இது பயனுள்ளதாக அமையும் என நம்புகிறோம்.

# தீர்வு திட்டம் முழு வடிவம் பெறவில்லை

உங்களது யோசனைகள் தமிழர் பிரச்சினையின் சில அடிப்படை அம்சங்களை (குறிப்பாக நிலவுரிமை, குடியேற்றம், பாதுகாப்பு, பிரதேச அபிவிருத்தி) தொட்டு நிற்பினும் ஒரு முழுமையான தீர்வுத்திட்ட வடிவமைப்பினை கொண்டதாக இல்லை.

இந்திய இலங்கை உடன்பாட்டில் பிரேரிக்கப்பட்டு பதின்மூன்றாவது அரசியல் யாப்பு திருத்தத்தால் சட்டவாக்கம் பெற்ற பழைய மாகாணசபை திட்ட வரைவுக்குள் இந்த யோசனைகள் உட்படுத்தப்பட்டது போலத் தெரிகிறது.

# மாகாணசபை தீர்வு தோல்வி கண்ட திட்டம்

மாகாண சபைத் திட்டத்தில் பல குறைபாடுகள் உள்ளன. அவற்றை எல்லாம் இங்கு பட்டியலிடுவது அவசியமல்ல. இது நடைமுறைப் படுத்தப்பட்டு தோல்வி கண்ட ஒரு தீர்வுத்திட்டம் என்பதும் உங்களுக்குத் தெரியாததல்ல. சிங்களப் பெரும்பான்மையினரின் அபிலாசைகளை மட்டும் பேணிப்பாதுகாக்கும் ஒற்றையாட்சி அரசியல் யாப்பின்கீழ் மத்திய அரசிடம் அனைத்து ஆட்சியதிகாரங்களும் ஒருமுகப்படுத்தப்பட்டிருக்கும் போது, பிரதேசரீதியில் உருப்படியான சுயாட்சித் திட்டம் எதையும் உருவாக்குவது சாத்தியமல்ல என்பதே கருத்து. நீண்டகால வரலாற்று அனுபவம் இந்த அரசியல் உண்மையை எடுத்தியம்புகிறது. இந்தியத் தலையீடும் இந்த வரலாற்று அனுபவத்தையே கற்றுக்கொண்டது.

புலிகள்
கெதிராக இராணுவத்தினால் கையாளப்படும் தந்திரோபாயத்தில் மாற்றங்கள் ஏற்படும் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகளைக் கடுமையாகத் தாக்கும் ஆக்கிரமிப்பு மனப்பான்மையுடைய தந்திரோபாயத்தைக் கையாளும் அதேவேளை யுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் வடகிழக்கு மக்களின் மனதைத் தமது பக்கம் சார்க்கும் புதிய அணுகுமுறையை இராணுவம் கடைப்பிடிக்கவுள்ளதாக முதுநிலை இராணுவ அதிகாரிகளால் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாத முடிவுக்குள் இராணுவத்தில் தொடர்ந்தாற்போல் பல பதவி உயர்வுகள் நிகழவுள்ளன.

77,000 பேர்கொண்ட சிறிலங்கா இராணுவப் படைக்குத் தளபதியாக மேஜர் ஜெனரல் சிசில் வைத்தியரட்ண நியமனம் பெறும்போது பிரதம தளபதிப் பதவிக்கு ஒரு அதிகாரியை அரசு நியமிக்க வேண்டும் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன. தற்போதுமேஜர் ஜெனரல் சிசில் வைத்தியரட்ணா இராணுவத்தின் பிரதம தளபதிப் பதவியில் உள்ளார் வைத்தியரட்ணா லெப் ஜெனரலாக உயர்த்தப்பட்டு இராணுவத் தளபதியாகப் பதவி உயர்வு பெறும்போது புதிய மேஜர் ஜெனரல் பதவிக்கு ஒரு வெற்றிடம் ஏற்படும் அடுத்த பிரதம தளபதி யார் என்பது இப்போதைக்குத் தெளிவாக இல்லை

அடுத்த முதுநிலை அதிகாரி மேஜர் ஜெனரல் விராஞ்சி சில்வாவாகும் அடுத்தாற்போல் மேஜர் ஜெனரல் யால ரெட்ணராஜாவும் மற்றும் மேஜர்ஜெனரல் ஜெறிசில்வா, வடபகுதித் தளபதி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ ஆகியோரும் முதுநிலை அதிகாரிகள் வரிசையில் உள்ளனர்

தற்போதைய இராணுவத் தளபதியாக இருக்கும் லெப்டினன்ட் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா நவம்பர் 15 ஆம் திகதியன்று கூட்டுப்படை நடவடிக்கைத்தலைமைச் செயலகப் பொறுப்பதிகாரியாக நியமனம் பெறுகிறார் இவ்வெற்றிடத்தை ஜெனரல் சிசில் வைத்தியரெட்ண நவம்பர் 15இல் பொறுப்பேற்கவேண்டுமானாலும் அதற்கு முன்னரே அவர் இந்தப் பதவியைப் பொறுப்பேற்கக் கூடும் என்று பாதுகாப்பு வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகின்றது

லெப். ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா ஒரு முழுமையான ஜெனரலாகக் கூட்டுப்படைத் தலைமைப் பொறுப்பதிகாரியாகப் பதவி வகிப்பார்

இந்தியா-சிறிலங்கா உடன்பாடு 1987 ஜூலை மாதம் கைச்சாத்தானதும் கலைக்கப்பட்ட முப்படைகள் நடவடிக்கைக் கட்டுப்பாட்டு தலைமை மீளவும் புதிதாக அமைக்கப்படுவதுடன் விடுதலைப் புலிகளுக்கு எதிராக இராணுவம் புதிய உத்திகளைக் கையாள இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது

கூட்டுப்படை நடவடிக்கைக் கட்டுப்பாட்டுத் தலைமைச் செயலகத்துக்குப் பதிலாக அமைக்கப்பட்ட நடவடிக்கைத் தலைமைச் செயலகம் பாதுகாப்பு அமைச்சின்கீழ் செயற்பட்டது

அடுத்த மேஜர் ஜெனரலாக எவரை நியமிப்பது என்பது பற்றி அரசின் தலைமை இதுவரை எந்த முடிவும் எடுக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. மேஜர் ஜெனரல் சிசில் வைத்தியரட்ணா இராணுவத் தளபதியாக புதிய நியமனம் பெறும்போது அந்த வெற்றிடத்தை இரு முதுநிலை அதிகாரிகளான பிரிகேடியர் திலக் பறணகமா பிரிகேடியர் லக்கி அல்கம ஆகிய இருவர்களில் ஒருவரைக்கொண்டு நிரப்பக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

து இவ்வாறு அவர் சரணடைந்திருக்கின்றார்.

எனினும் இவர் பெருந்தொகையான பிணையில் விடுவிக்கப்படுவார் என்று எதிர்பார்ப்பதாக அவரது வழக்க

திரும்பியிருப்பதாக அறிவித்தார். அடுத்த ஆண்டு பொதுத் தேர்தலிலும் போட்டியிடுவதற்கும் அவர் விருப்பம் தெரிவித்திருந்தார்.

இவரது கணவர் மார்கோஸின் சடலத்தை எடுத்து வர பிலிப்பைன்ஸ் அரசு இவருக்கு அனுமதி வழங்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது

4 தமிழர்
பின் பதினேழுக்கும்மேற்பட்ட தமிழர்களை கைது செய்து முகாமுக்கு கொண்டு சென்று அங்கு சித்திரவதைக்குட்படுத்தியதாக தெரிவிக்கப்படுகிறது

## மரண அறிவித்தல்

## திருமதி சரஸ்வதி செல்வத்துரை

அழகொல்லை, அளவெட்டியைச் சேர்ந்த திருமதி சரஸ்வதி செல்வத்துரை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற திரு திருமதி சின்னத்தம்பி அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்ற மலேயன் பென்சனியர் செல்வத்துரை அவர்களின் அன்பு மனைவியும், பேராசிரியர் பாலசிங்கம் (பொறியியல் பீடம்-பேராதனை பல்கலைக்கழகம்), திருமதிகள் மகாலட்சுமி விஸ்வலிங்கம், காலஞ்சென்ற சுந்தரவதனி அருணானந்தம், விக்னேஸ்வரி சிவகுரு, டாக்டர் சிவனேஸ்வரி ஸ்ரீரங்கலிங்கம் (லண்டன்), செந்தில்நாதன் (பொறியியலாளர் கனடா), சிவகுமாரன் (பிராந்திய முகாமையாளர் செற்றோலிவர் கூட்டுத்தாபனம் லண்டன்), செல்வக்குமாரன் (பொறியியலாளர் - கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி பாலசிங்கம் (விரிவுரையாளர் பேராதனை பல்கலைக்கழகம்), காலஞ்சென்ற க. விஸ்வலிங்கம் (A O வொலிவ் தலைமையகம்) திரு அருணானந்தம் (இளைப்பாறிய உதவி அதிபர். இந்துக்கல்லூரி பண்டத்தரிப்பு), டாக்டர் சிவகுரு (R. M. O, A. M. C) யாழ்ப்பாணம்), டாக்டர். சிறீரங்கலிங்கம் (லண்டன்). திருமதிகள் செந்தில்நாதன் (கனடா), சிவகுமாரன் (லண்டன்), டாக்டர் செல்வக்குமாரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற N. S. கந்தையா (மலேயா), காலஞ்சென்ற நாகம்மா, காலஞ்சென்ற இராசம்மா, திரு. சிவபாதசுந்தரம் (ஓய்வு பெற்ற அதிபர், யாழ். பரமேஸ்வராக் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார் அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று காலை 6-11-91 ஒன்பது மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:

குடும்பத்தினர்

''செல்வ வாசம்''

அழகொல்லை,
அளவெட்டி.

(R/1911)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.